பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
05 06 2025 **THURSDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசு மேற்கொண்டு வரும் நலத்திட்டங்களால் 25 கோடி ஏழை மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. கரியமில வாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்த ரயில்வே அமைச்சகம் முனைப்புடன் பணியாற்றி வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்க அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

4. சுற்றுச்சூழலை பாதுகாக்க அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Parikshit Somani -** இத்தாலியின் **Simone Agostini** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>><<<<<<**

மத்திய அரசு மேற்கொண்டு வரும் நலத்திட்டங்களால் 25 கோடிக்கும் அதிகமான ஏழை மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிரதமரின் வீட்டு வசதி திட்டம், உஜ்வாலா திட்டம், ஜன்தன் மற்றும் ஆயுஷ்மான் பாரத் போன்ற திட்டங்களால் ஏழைகளுக்கு பாதுகாப்பான வீடு, தூய்மையான சமையல் எரிவாயு, வங்கி சேவை மற்றும் சுகாதார சேவைகள் கிடைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மேலும், நேரடி பணப்பரிமாற்றம், டிஜிட்டல் சேவைகள் மற்றும் கிராமப்புற கட்டமைப்பு வசதிகள், அரசின் செயல்பாட்டில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திருப்பதுடன், கடைக்கோடியில் உள்ள பயனாளிக்கும் அரசின் சேவைகள் விரைவாக கிடைக்கச் செய்திருப்பதாகவும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய முன்முயற்சிகள் மூலம், அனைத்து மக்களும் கண்ணியத்துடன் வாழ்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி, சுயசார்பு இந்தியாவை உருவாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

உலக சுற்றுச்சூழல் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, புதுதில்லியில் உள்ள பிரதமர் இல்ல வளாகத்தில் செந்தூர மரக்கன்று ஒன்றை திரு. நரேந்திர மோடி நட்டு வைத்தார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த மரக்கன்று, 1971ஆம் ஆண்டு இந்திய – பாகிஸ்தான் போரின் போது, குஜராத்தின் கட்ச் பகுதியில், வீரத்தையும், துணிச்சலையும் வெளிப்படுத்தியவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களால் தமக்கு பரிசளிக்கப்பட்டதாக குறிபிட்டுள்ளார்.

பின்னர் புதுதில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், பிரதமர் கலந்துகொண்டு அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டத்தின்கீழ் மரக்கன்று ஒன்றை நட்டுவைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் தில்லி அரசின் சார்பில் இயக்கப்படும் 200 மின்சாரப் பேருந்துகளின் சேவையையும் பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் சுற்றுச்சூழல் தினத்தை ஒட்டி, மாநில அரசின் சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சுற்றுச்சூழலை பாதுகாக்க அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மாநிலத்தில் கடல்பசு காப்பகம், தேவாங்கு சரணாலயம் உட்பட ஏழு வனஉயிரின காப்பகங்கள் அமைக்கப்பட்டிருப்பதையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

(சவுண்ட் பைட் - ஸ்டாலின் 35 செகண்ட்ஸ்)

சென்னை கிண்டியில் அமைக்கப்படவுள்ள மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் புதிய ஆராய்ச்சி மையத்திற்கும் இந்த நிகழ்ச்சியில் திரு. மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

இதனிடையே, தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலமான மாமல்லபுரத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டை தவிர்ப்பது குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேகா 44 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

கரியமில வாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்த ரயில்வே அமைச்சகம் முனைப்புடன் பணியாற்றி வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

உலக சுற்றுச்சூழல் தினத்தை ஒட்டி நாளேடு ஒன்றில் எழுதிய கட்டுரையை தமது சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ள அமைச்சர், ரயில்வே துறை தூய்மையாக எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவித்து வருவதாக குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த போக்குவரத்து முறையை உருவாக்க ரயில்வே அமைச்சகம் உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த ஓராண்டில் 700 கோடி பயணிகள் ரயில் பயணத்தை மேற்கொண்டதாகவும், சரக்கு போக்குவரத்தும் கடந்த நிதியாண்டில் ஆயிரத்து 617 மில்லியன் டன்னாக அதிகரித்தாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் அந்தக் கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

தீவிரவாதம் உலகளாவிய அச்சுறுத்தலாக உருவாகியுள்ள நிலையில், அதனை முற்றிலும் ஒழிக்க அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

பிரிக்ஸ் நாடாளுமன்ற கூட்டத்தினிடையே, பிரேஸில் நாடாளுமன்ற அவைத் தலைவர் திரு. **Hugo Motta**-வை சந்தித்துப் பேசிய அவர், தீவிரவாத்தை முழுவதுமாக ஒழிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்தார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைளுக்கு உறுதியான ஆதரவு அளித்ததற்காக பிரேஸில் அதிபர் திரு. **Lula da Silva** வுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.

**>>>>>>><<<<<<**

ஆப்பரேஷன் சிந்தூர் குறித்து உலக நாடுகளிடம் எடுத்துரைப்பதற்காக அமைக்கப்பட்ட திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. கனிமொழி தலைமையிலான அனைத்துக் கட்சி குழுவினர் புதுதில்லியில் இன்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கரை சந்தித்து பேசினர்.

ரஷ்யா, லாட்வியா, ஸ்லோவேனியா, கிரீஸ் மற்றும் ஸ்பெயின் நாடுகளில் தாங்கள் மேற்கொண்ட பயணம் குறித்தும், அந்நாடுகள் இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்தது குறித்தும் இக்குழுவினர் வெளியுறவு அமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.

இதேபோன்று, ஜப்பான், தென்கொரியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா மற்றும் மலேசியாவில் பயணம் மேற்கொண்ட ஐக்கிய ஜனதா தள கட்சியின் திரு. சஞ்சய்குமார் ஜா தலைமையிலான குழுவினரும் வெளியுறவு அமைச்சரை சந்தித்து விளக்கமளித்தனர்.

**>>>>>>><<<<<<**

நாடுமுழுவதும் வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் மத்திய அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கிலும், விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து எடுத்துரைப்பதற்காகவும் இந்த இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் திருவண்ணாமலை வேளாண் அறிவியல் மையம் சார்பில் காரணை கிராமத்தில் நடைபெற்ற பிரச்சார இயக்கம் தங்களுக்கு உதவிகரமாக இருந்தது என்று பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - 20 செகண்ட்ஸ்)

**>>>>>>><<<<<<**

ஜம்மு காஷ்மீர் அரசு ஊழியர்களுக்கு 2 சதவீத அகவிலைப்படி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த உயர்வு கடந்த ஜனவரி மாதம் முதல் அமலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜனவரி முதல் மே மாதம் வரையிலான நிலுவைத்தொகை ஜூன் மாத சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும் என்றும் ஜம்மு காஷ்மீர் அரசு தெரிவித்துள்ளது.

**>>>>>>><<<<<<**

ஹஜ் புனிதப் பயணத்தின் முக்கிய நிகழ்வாக, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளிலுமிருந்து சவுதி அரேபியா சென்றுள்ள லட்சக்கணக்கான யாத்ரிகர்கள், இன்று தங்களது புனித கடமையை நிறைவேற்றினர்.

நேற்றிரவு மினா நகரில் தங்கிய இந்த யாத்ரிகர்கள், இன்று அராஃபத் பகுதிக்குச் சென்று, தொழுகை நடத்தினர்.

**>>>>>>><<<<<<**

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Parikshit Somani -** இத்தாலியின் **Simone Agostini** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-7, 6-3, 10-8 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் **Felix Balsaw – Norway-**ன், **Fredrik** இணையை வென்றது.

**>>>>>>><<<<<<**

நார்வே செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Koneru Humpy** தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். எட்டாவது சுற்று முடிவில் அவர் 13 புள்ளி ஐந்து புள்ளிகளை பெற்றுள்ளார்.

>>>>>>><<<<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது. இதில் திண்டுக்கல் அணி – கோவை அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<